## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண்.12
## 2025, மார்ச் 21, வெள்ளிக்கிழமை
## பங்குனி 7, திருவள்ளுவர் ஆண்டு – 2056

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, **மாண்புமிகு பேரவைத் தலைவர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:–

**"படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்**
**உடையான் அரசரு ளேறு."**

(ஆற்றல்மிகு படை, அறிவார்ந்த குடிமக்கள், குறையாவளம், குறையற்ற அமைச்சு, முரிபடாத நட்பு, மோதியழிக்க முடியாத அரண் ஆகிய ஆறு சிறப்புகளும் உடையதே அரசுகளுக்கிடையே ஆண் சிங்கம் போன்ற அரசாகும்.)

1. வினாக்கள் – விடைகள்

வரிசை எண்கள் 71 முதல் 80 வரையுள்ள உடுக்குறியிட்ட வினாக்கள் பேரவையில் வினவப்பட்டு விடையளிக்கப்பட்டன.

2. 2025–2026–ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை பேரவைமுன் வைத்தார்.

3. 2024–2025–ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி)

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் 2024–2025–ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை (இறுதி) பேரவைக்கு அளித்தார்.

### அறிவிப்பு

"2024–2025–ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி) பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்."

### MESSAGE

**"In pursuance of Clause (2) of Article 205, read with clause (3) of Article 203, of the Constitution of India, I, R.N. RAVI, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the Financial year 2024-2025."**

4. 2024–2025–ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி)

2024–2025–ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி) மீது வாக்கெடுப்பு.

2024–2025–ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி) அடங்கிய 21.3.2025–ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதி துணை நிதிநிலையை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள்,

..2

2024–2025–ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெறவேண்டும் என்னும் தீர்மானத்தை மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்தார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்று சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

<u>அறிவிப்பு</u>

"2025–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்."

5. <u>அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)</u>

<u>2025–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு</u>

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற் விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

<u>அறிவிப்பு</u>

"2025–2026–ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்."

**<u>MESSAGE</u>**

**"In pursuance of Clause (2) of Article 206, read with clause (3) of Article 203, of the Constitution of India, I, R.N. RAVI, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for grants in advance, during the Financial year 2025-2026."**

6. <u>2025–2026–ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்</u>

2025–2026–ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

2025–2026–ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 21.03.2025–ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2025–2026–ஆம் ஆண்டின் உடனடிச் செலவிற்காக அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெறவேண்டும் என்னும் தீர்மானத்தை மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் மொழிந்தார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

..3

<u>அறிவிப்பு</u>

"2025–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

7. <u>அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)</u>

<u>2025–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் ( முன்னளி மானிய வாக்களிப்பு ) சட்டமுன்வடிவு</u>

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

8. <u>2025–2026–ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 2025–2026–ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை</u>

2025–2026–ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 2025–2026–ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின் மீதான பொது விவாதத்திற்குப் பதிலுரை.

2025–2026–ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திற்கு மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்கள்.

2025–2026–ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திற்கு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்கள்.

9. <u>அரசினர் தீர்மானம்</u>

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிந்தார்:–

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130, மற்றும் 132 ஆகியவற்றை தளர்த்தி பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2025–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.7/2025) மற்றும் 2025–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.8/2025) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டது.

10. <u>அரசினர் சட்டமுன்வடிவுகள் ( ஆய்வு செய்தல் )</u>

1. <u>2025–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 7/2025)</u>

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டுமெனக் கோரினார்.

..4

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

2. <u>2025–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.8/2025)</u>

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டுமெனக் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்று சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

பேரவை பிற்பகல் 12.39 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மீண்டும் 2025–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24–ஆம் நாள் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்குக் கூடும்.

**முனைவர் கி. சீனிவாசன்,**
**முதன்மைச் செயலாளர்.**